**கட்டுநாயக சீதுவ நகர சபை - 2023**
**---------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டுநாயக சீதுவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கட்டுநாயக சீதுவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 3.29 மற்றும் அதன் பின்னிணைப்பு 2 மற்றும் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் காசுப்பாய்ச்சல் கணிக்கும் போது ஊழியர் கடன் வழங்குதல் ரூபா 14,724,711 தொகை மற்றும் கடன் திருப்பிப் பெறல் ரூபா 12,261,613 தொகை வெவ்வேறாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அப் பெறுமதியின் தேறிய பெறுமதி மாத்திரம் காட்டப்பட்டிருந்ததுடன் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 32,991 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | அந்தத் தவறு அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருக்கப்படும் என. | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய குப்பைக் கட்டண வருமானமாகிய ரூபா 2,548,000 தொகை பெற வேண்டிய மூலதன மானியக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தனிப்பட்ட கணக்கொன்றாக மாற்றிக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 31,972 இற்கான நூலகப் புத்தகங்கள் அகற்றல் தொடர்பாக பெறுமானத்தேய்வு ரூபா 10,996 தொகை பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கிலிருந்து அகற்றப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 13,040 தொகை அகற்றப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டு இந்த வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மூலதன மானியம் ரூபா 50,394 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் அந்தப் பெறுமதியினால் பெற வேண்டிய மூலதன மானிய மீதி மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் 03 கணக்கு மீதிகளிடையே ரூபா 775,752 தொகைக்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசமொன்று காணப்பட்டது. | அடுத்த ஆண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கமின்மைக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நீர் பில்பத்திரம் | 3,888,743 | திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்ட காரணம் | சரியான நீர்க் கடன்பட்டோர் மீதிகளை பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்வதற்கு அடுத்த ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்திற்கான காரணங்கள் எவை என வெளிப்படுத்த வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) | வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முன்னர் விசாரணை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 6,309,706 தொகை அவ்வாறு விசாரணை மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.2.1 | மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த புதிய 70 செயற்திட்டங்கள் தொடர்பாக நிர்மாண வேலைகள்/ வேலைகள் அடங்கிய பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாரின் 2020 திசெம்பர் 03 திகதிய LGD/13/2016(1) இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | வாடகை உடன்படிக்கை மேற்கொண்ட திகதியில் இருந்து ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு முறை மாதாந்த வாடகை அரச பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரின் பெறுமதி மதிப்பீட்டின் படி திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கொடுகொட வீதி பாலத்தின் அண்மையிலுள்ள கடையறைகள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெறுமதி மதிப்பீடொன்று அண்மித்த 3 ஆண்டுகளினுள் திருத்தப்பட்டுள்ளது என கணக்காய்வில் கண்டறியப்படவில்லை. | எதிர்காலத்தில் அந்த உரிமை தொடர்பான சிக்கலை தீர்த்துக் கொண்டு பெறுமதி மதிப்பீட்டிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.7.2 வரித் தேவைகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டு முதல் காணப்படுகின்ற செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி ரூபா 218,245 தொகையினை தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பேரேட்டு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வரிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 147,401,280 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 177,782,346 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்க ப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்க ப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரி மற்றும் வரி | 152,900 | 151,740 | 150,753 | 55,909 | 153,675 | 156,364 | 149,987 | 56,245 |
| வாடகை | 16,538 | 11,587 | 14,008 | 931 | 8,550 | 11,939 | 12,031 | 882 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,151 | 4,899 | 4,899 | - | 5,321 | 4,965 | 4,965 | - |
| ஏனைய வருமானங்கள் | 146,901 | 205,849 | 196,041 | 32,460 | 118,025 | 133,233 | 129,081 | 18,763 |
| | 322,490 | 374,075 | 365,701 | 89,300 | 285,571 | 306,501 | 296,064 | 75,890 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரியாக 487 அலகுகளில் இருந்து ரூபா 557,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் வெற்றிடம் காரணமாக அறவீடுகள் தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2023 ஆண்டு தொடர்பாக விழாக்கள்/ கூட்டங்கள் மண்டபங்களை ஒதுக்கும் கட்டணம் அறவீடு | எதிர்காலத்தில் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணைச் சட்டமொன்றை அனுகுவதற்கு அல்லது புதிய துணைச் |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிட்டிருக்காத போதிலும் அந்த கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியுமானவாறு துணைச் சட்டமொன்று தழுவுவதற்கு அல்லது அதற்குரிய துணைச் சட்டமொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | சட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த பொது மக்கள் முறைப்பாடுகளில் தீர்க்கப்பட்டிருக்காத பொது மக்கள் முறைப்பாடுகள் 05 காணப்பட்டது. | விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொது மக்கள் முறைப்பாடுகளை கூடிய விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விளம்பர அறிவித்தல் தொடர்பான துணைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கு முரணாக சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பாதைகளுக்கு தோற்றக் கூடியவாறு வியாபார நிலைய காணிகளில் பொருத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல்களுக்கு சபையினால் உரிய முறையில் கட்டணம் அறவீடு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்காத 4 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டதுடன் சீதுவ சந்தியில் 150 மீற்றர் தூர அளவான கட்டணம் அறவிடப்படாத 23 அறிவித்தல் பலகைகள் இனங்காணப்பட்டதுடன் அதன்படி அண்ணளவாக ரூபா 333,950 தொகையான வருமானமொன்றினை சபை இழந்துள்ளது. | வியாபார நிலையங்களில் வியாபாரம் தொடர்பான அறிவித்தல்களில் இருந்து அறவீடு செய்வதற்காக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | துணைச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும் |
| (ஆ) | 2023 ஆண்டில் காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது சபைக்கு உரித்தான 88.8 பர்சஸ் பொது வசதிகளுக்கான காணியின் பெறுமதியினை கணக்கீடு செய்யும் போது ரூபா 1,250,000 இற்கான ஒரு பர்சஸின் குறைந்த விற்பனை விலையை கவனம் செலுத்தாமல் கிடைத்திருந்த காணி உறுதியின் பெறுமதி ரூபா 100,000 தொகை பெறுமதியினை காணியின் பெறுமதியென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 1,250,000 தொகைக்கான ஒரு பர்சஸின் குறைந்த விற்பனை | அடுத்த ஆண்டு சொத்துக்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு காணிக்குரிய நியாயமான பெறுமதியொன்று இறுதிக் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலையினை கவனத்தில் எடுக்கும் போது 88.8 பர்சஸ் பொது வசதிகளுக்கான காணியின் பெறுமதி ரூபா 111,000,000 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு உரித்தாகியிருந்த காணியின் பெறுமதியை ரூபா 110,900,000 தொகையினால் குறை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | சபைக்கு நீண்டகாலமாக கிடைக்க வேண்டியிருந்த மிகை விதிப்பு ரூபா 1,677,409 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த தொகையை எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்க கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக 2023 ஆண்டிற்கான கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய மேற்கொள்ளப்பட்ட வியாபார அனுமதிப்பத்திர கணிப்பீட்டின் தரவுகளை பயன்படுத்தி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் மூலம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய நிறுவனங்கள் தனியாக இனங்கண்டு ஆவணப்படுத்த வேண்டும். |
| (உ) | கூட்டுப்பெறுமதி ரூபா 328,000 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட 310 நிறுவனங்கள் வியாபார அனுமதிப்பத்திரமின்றி செயற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததனால் வர்த்தகங்கள் தொடர்பான ஒழுங்குறுத்தலொன்று மேற்கொள்ளப்படாமையால் பொது மக்கள் தொடர்பான பொறுப்பினை புறக்கணித்தல் நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு முரணானதாக இருந்தது. | அடுத்த ஆண்டு முதல் அனைத்து பிரிவுகளிலும் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத நிறுவனங்களுக்காக சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தக நிலையங்கள் தொடர்பாக முறையான ஒழுங்குறுத்தல் ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | சபையில் காணப்படும் கட்டிடமொன்று தொடர்பாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளாமல் சபையினால் மீளாய்வாண்டின் போது பெறுமதி மதிப்பீட்டுச் சபையொன்றின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கியிருந்த மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 20,996,166 தொகை கணக்குகளில் கட்டிடங்களின் பெறுமதி என கணித்திருத்தல் முகாமைத்துவத்தின் திறமையின்மை ஒன்றாகக் காணப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெறுமதி மதிப்பீடு பெற்றுக் கொள்ள வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான விதி 406 இற்கு இணங்க 07 அசையாச் சொத்துக்களை வாடகைக்கு கொடுப்பதற்காக அரச அல்லது தனியார் பட்டய பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொண்டிருக்காததுடன் நகர சபை நிதி விதி 314(1), 335, 341 இற்கு இணங்கவும் நடவடிக்கை எடுத்தும் இருக்கவில்லை. | 2024 ஆண்டிற்கான வாடகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதனால் 2025 பெறுகை ஆண்டிற்காக அந்த பெறுமதி மதிப்பீட்டை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | நகர சபை நிதி விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | கட்டுநாயக புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த கடையறைகள் திறக்கப்படாமை தொடர்பாக சபையினால் கண்காணிப்பு ஏதும் மேற்கொண்டிருக்காததனால் வர்த்தக கட்டிடத் தொகுதி மக்கள் காணப்படாததுடன் ஆக்கபூர்வமான அலுவல் ஒன்றிற்காக ஈடுபடுத்தக் கூடியதாக காணப்பட்ட அந்த கட்டிடத்தின் தரை மாடியில் பாரிய அளவான தரைப் பகுதியொன்று எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | அபிவிருத்தி அலுவல்களின் பின்னர் சபைக்கு வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சீதுவ புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் கடையறைகள் தொடர்பான உடன்படிக்கையின் 17 ஆம் இலக்க நிபந்தனையின் படி எச்சந்தர்ப்பத்திலும் கடையறையின் வாடகைக்கு கொடுத்தவரின் எழுத்துமூல அங்கீகாரமின்றி வேறொருவருக்கு சாட்டுதல், ஈடுவைத்தல், துணை வாடகைக்கு கொடுத்தல் அல்லது வாடகைக்கு கொடுத்தல் மூலம் வெளித்தரப்பினருக்கு உரித்தாக்க முடியாது எனினும் வாடகைக்கு கொடுத்தவரின் அங்கீகாரமின்றி துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததென பின்னர் இனங்காணப்பட்டிருந்த 07 கடைகளுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 03 திகதிய LGD/13/2016(1) கொண்ட சுற்றறிக்கைக்கு இணங்க | வாடகைக்கு பெற்றவர்களுக்கான உடன்படிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சாட்டுதல் கட்டணமொன்று பெற்றுக் கொண்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஈ) | வாடகைக்கு எடுத்தவரல்லாத ஏனைய தரப்பினரினால் வியாபாரங்களை நடாத்திச் செல்லும் சீதுவ புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் 09 கடையறைகள் தொடர்பாக சபையினால் முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | வாடகையாளர் தொடர்பாக உடன்படிக்கையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தொகை ரூபா 2,980,879 தொகைக்கான 14 கொள்வனவு சந்தர்ப்பங்கள் 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3 (இ) இற்கு முரணாகவும் அவற்றில் ரூபா 2,336,636 தொடர்பாக 12 சந்தர்ப்பங்களில் அந்தக் கோவையின் செயல் நடவடிக்கை கோவையின் 6.3.6 இற்கு முரணாக ரூபா 41,391 தொகையும் ஒரு சந்தர்ப்பத்தில் வழிகாட்டல் கோவையின் 5.6 இற்கு முரணாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 04 சந்தர்ப்பங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களிடம் மாத்திரம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டது எனினும் 09 சந்தர்ப்பங்களில் சிற்சில காரணங்களினால் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருக்கவில்லை என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.2(இ), 2.6.1(அ)(ii) மற்றும் 7.11.1 ஆகிய வழிகாட்டல்களுக்கு முரணாக ரூபா 392,000 தொகை செலுத்தி நிழற்பிரதி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.2 (இ) இன் படி முறையான தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமனம் செய்திருக்காமை பலவீன நிலைமை ஒன்றென ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

(இ) 2022 ஆண்டின் போது இணையத்தின் மூலம் கொடுப்பனவு செய்வதற்காக 07 மென்பொருட்கள் நிறுவுவதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 4,985,000 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| I. | ரூபா 3,565,000 தொகை பெறுமதியான 05 மென்பொருள் முறைமைகள் 2023 நவம்பர் 24 திகதி கணக்காய்வுத் திகதியளவிலும் செயற்பாடு நிலைமைக்கு ஆக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த விடயங்கள் அனைத்தும் மிக விரைவில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மென்பொருள் முறைமையை செயற்படு நிலைமைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| II. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகளுக்கு முரணாக சபையினால் முழுத் தொகையையும் செலுத்தி முடிக்கப்பட்டதுடன், நகர சபை உத்தியோகத்தருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வருமானப் பிரிவின் தலைவரினால் கோவையின் 120 ஆம் பக்கத்தின் படி குறிப்பிட்ட பயிற்சிகள் உரிய முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டது என பரிந்துரைக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | முறையான பயிற்சியொன்று குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவறை முறைமைகள் நிர்மாணிக்கும் போது 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.1(ஈ), 4.2.2, 6.2.1(அ), 6.2.2 வழிகாட்டல்களுக்கு முரணாக செயற்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டம் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் விடயம் 45 இன் கீழ் 140.75 சதுர அடி அலுமினியம் பார்டிஷனுக்காக ரூபா 192,546 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்வதற்கு முன்னர் அந்த கழிவறை முறைமைக்கு நுழைவதற்காக 164.44 சதுரஅடி அலுமினிய பார்டிஷன் பயன்படுத்தப்பட்டு கொடிடோ ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது என பௌதீக ரீதியாக அவதானிக்கப்பட்டது. அதன் படி சபையினால் பெறுகைக்கு முரணாக மதிப்பீட்டில் அடங்கியுள்ள கருமம் ஒன்றினை ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அந்த கருமங்கள் முறையான செய்முறையொன்று ஊடாக மேற்கொள்வதற்கு இணங்குவது எனவும் நீடித்த விடுமுறையொன்று காணப்பட்ட சந்தர்ப்பத்தில் அலுவலக கடமைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதை குறைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் நல்லெண்ணத்துடன் இது நிறைவேற்றப்பட்டது என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ஓட்ட நிலையில் காணப்படாத 07 வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு ஓட்டுவதற்கு பயன்படுத்தாமையால் தொடர்ந்தும் உக்கிய நிலையில் காணப்பட்டது. | திருத்த வேலைக்கு தகைமையுடைய டிரக்டர் வண்டியை திருத்த வேலை மேற்கொள்வதற்கும் ஓட்டத்திற்கு பொருத்தமற்ற விதத்தில் காணப்பட்ட டிரக்டர் வண்டியை அப்புறப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது என. | திருத்த வேலைகள் உரிய முறையில் மேற்கொண்டு சொத்துக்களின் உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேல் மாகாண திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து 2021 மார்ச் 20 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த இப்புறப்படுத்தும் நிலைமையில் காணப்பட்ட மோட்டார் வாகனத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 691,529 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த நாள் முதல் 68 நாட்கள் சுமார் 4,595 கிலோமீற்றர் ஓட்டப்பட்டிருந்ததுடன் 2023 ஆண்டின் போது ரூபா 45,550 தொகை செலவிடப்பட்டு கிளச் முறைமையும் திருத்த வேலை மேற்கொண்டு இருந்த போதிலும் 2023 ஆண்டு முழுவதும் ஓட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமையை எதிர்வரும் காலத்தில் குறைத்துக் கொள்வதற்கும் வாகனத்தை உச்ச மட்ட செயற்திறனுடன் ஓட்டத்திற்கு பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | வாகன நிருவாகம் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டு உச்ச மட்ட செயற்திறனுடன் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி விபரங்களின் படி இரண்டாம் மட்ட 3 பதவிகளில் 7 வெற்றிடங்களும் 1 பதவியில் மிகையொன்றும் மற்றும் ஆரம்ப மட்ட 3 பதவிகளில் 22 வெற்றிடங்களும் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் அரசினால் நிறுத்தப்பட்டிருப்பதனால் அவ்வாறு வெற்றிடங்கள் காணப்பட்டது என. | சபையின் கடமைகளின் செயற்திறனுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பதவியணி முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |